கூட்டுறவு விற்பனை நிலையங்கள் மூலம் காய்கறி விற்பனை.

*வினா எண். 441—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு கூட்டுறவு—சட்ட அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகம் பூராவும் கூட்டுறவு விற்பனை நிலையங்கள் மூலம் காய்கறிகளையும் விற்பனை செய்ய தமிழக அரசிடம் திட்டம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் இது பற்றிய விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம்: தலைவரவர்களே, கிராமப்புறங்களில் காய்கறிகள் விற்பனையாவதற்கு வழியில்லாமல் விவசாயிகள் உற்பத்திச் செய்யும் பொருள்கள் அழுகிப்போகிறது ஒரு பக்கம். இன்னொரு பக்கம் நகரங்களில் அல்லது கிராமங்களிலேகூட காய்கறிகள் கிடைக்காத நிலை இருக்கிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் தக்காளியை கிலோ 25 பைசாவுக்குக்கூட வாங்க ஆள் இல்லை கிராமத்தில். ஆனால் நகரங்களில் இரண்டு ரூபாய்க்கு மேல் விற்கிறது. இப்படிப் பட்ட குறைபாடுகளைப் போக்க அரசு காய்கறிகளைக் கூட்டுறவு விற்பனை நிலையங்கள் மூலம் கொள்முதல் செய்து விற்பனை செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே, கிராமப் புறங்களில் விவசாயிகளுக்கு உற்பத்திக்கு ஏற்ற ஊதியம் காய்கறிகளைப் பொறுத்தவரையில் கிடைக்கவில்லை என்பது உண்மைதான். இருந்தாலும் நகரப் புறங்களிலே அதிக விலைக்கு விற்கும் காய்கறிகளை முறைப்படுத்துவது என்பது சிரமமான ஒன்று. காய்கறிகள் 'பெரிஸ்பிள் திங்க்ஸ்'—அழுகும் பொருட்கள் என்பதால் கூட்டுறவு விற்பனை நிலையங்கள் மூலம் வாங்கிவைத்து, விற்பனை செய்ய வசதி இல்லை. இருந்தாலும் கோயம்புத்தூர், வேலூர், நீலகிரி பகுதிகளில் நடப்பாண்டில் காய் கறிகளைப் பக்குவப்படுத்தி பாதுகாத்து வைக்க வசதி செய்து, அந்த காய்கறிகளைச் சென்னை போன்ற பெரிய நகரங்களுக்கு கொண்டுவர அரசு நடவடிக்கை எடுக்கும்.

1981 மார்ச் 23]

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தலைவ ரவர்களே, சில குறிப்பிட்ட நகரங்களில் விற்பனை செய்வதற் கான நடவடிக்கையை அரசு எடுத்துவருவதாக அமைச்சரவர் கள் கூறினார்கள். குறைந்தபட்சம் பெருநகரங்களிலாவது அவ்வாறு காய்கறியினை விற்பதற்குரிய வகையிலே நடவடிக் கை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே, நான் ஏற்கனவே சுட்டிக்காட்டியது போல பெசிலிட்டீஸ் பார் பிரசர்வேஷன் அதாவது காய்கறிகளைப் பாதுகாப்பதற்குரிய போதிய வசதிகளைப் பொறுத்துதான் இதனைப் படிப்படியாகத் தான் செய்ய முடியும். காய்கறிகளை நீண்ட நாட்களுக்குப் பாதுகாப்பது என்பது பெரும் பிரச்சினை. அதிலும் கோல்ட் ஸ்டோரேஜிலே வைத்துவிட்டு எடுத்துவிடுகின்ற காய் கறிகள் இரண்டு நாட்களுக்குள்ளாகவே பெரிதும் பழு தடைந்துவிடுகின்றன என்பது பற்றிய ஆய்வுகள் கிடைத் திருக்கின்ற காரணத்தால் நாம் மிகவும் எச்சரிக்கையாக இந்தத் திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என்ற வகையில் ஆய்ந்துகொண்டு வருகிறோம்.

திரு. ப. பொன்னுரங்கம்: தலைவரவர்களே, கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக காய்கறி விற்பது பற்றி முன்பு ஒன்று சொல்லப்பட்டது. என்னுடைய ஞாபகம் சரியாக இருக்கும் என்று கருதுகிறேன். ஒரு பொங்கல் தினத்தன்று அப்போதைய உணவு அமைச்சர் திரு. எட்மண்ட் அவர்கள் தலைமையில் ஒரு திட்டம் தொடங்கப்பட்டது. அதாவது சென்னை நகரில் வாழ்கின்ற மக்களுக்கு காய்கறிகள் எளிதாகக் கிடைக்கின்ற வகை யில் மூன்று சக்கர வண்டிகள் மூலம் காய்கறிகள் சலோபன் பேப்பரிலே போடப்பட்டு வழங்கப்படும் என்று அறிவித் தார்கள். வீடு தேடிவரும் என்றார்கள். அதுபற்றி பத்திரிகை களிலே எல்லாம் கூட செய்திகள் வந்தன. அந்தத் திட்டம் தற்போது சென்னை மாநகர மக்களுக்குப் பயன்படுகின்ற வகை யில் பரவலாக்கப்பட்டிருக்கின்றதா? சென்னையைத் தாண்டி செங்கற்பட்டு, வடாற்காடு, தென்னாற்காடு போன்ற இடங் களுக்கும் அவ்வாறு காய்கறிகள் கொடுப்பதற்குரிய முயற்சிகளை அரசு எடுத்திருக்கிறதா? அப்படி என்றால் அந்தத் திட்டத்தின் நிலைமை என்ன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, ட்ரைவீலர் மூலமாக அதாவது மூன்று சக்கர வண்டிகள் மூலமாக காய்கறிகளை வீடு வீடாகத் தரவேண்டும் என்ற அடிப்படையில் கொண்டுவரப்பட்ட அந்தத் திட்டத்தை மீண்டும் நிறைவேற்று வதற்குத் தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

ஆனால் நுகர்பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் அங்காடிகள் மூலமாக அவற்றை விற்பதற்குரிய வகையில் அதை விரிவு படுத்தலாம் என்று முடிவு செய்து தற்போது ஆராய்ந்து வரு கிறோம். விரைவில் அது நடைமுறைக்குக் கொண்டு வரப் படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. சி. சண்முகம்: தலைவரவர்களே, கூட்டுறவுக் கடையிலே பல பிரச்சினைகள் இருக்கின்றன. சில நாட்களுக்கு முன் வடாற்காடு மாவட்டத்திற்கு விஜயம் செய்த நமது முதல்வர் அவர்கள் பல கடைகளை நேரடியாகவே சோதனை செய்திருக் கிறார்கள். கூட்டுறவுக் கடைகளின் நேரம் வரையறுக்கப் பட்டுள்ளதா? ஒரு குறிப்பிட்ட பகுதியில் 100 கிலோ சர்க்கரை வேண்டும் என்றால் 80 கிலோ...............

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சர்க்கரை சம்பந்தப் பட்ட கேள்வி எல்லாம் கேட்க வேண்டாம். இது காய்கறி பற்றி கேள்வி.

வள்ளுவர் நகரில் குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகள் கட்டும் திட்டம்.

*வினா எண். 442— திரு. அ. செல்வராசன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை துறைமுகப்பகுதியில் வள்ளுவர் நகரில் குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகள் கட்டும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.